# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 29.10.2024 | supeedsam.com | supeedsam@gmail.com







# தமிழரசில் இருந்து என்னை யாரும் வெளியேற்ற முடியாது!

"அரசியல் ரீதியான அழுத்தங்களும், நெருக்கடிகளும் நிறைந்திருக்கும் சமகாலத்தில், அவை அனைத்தையும் எதிர்கொண்டவாறு எனது அரசியல் பயணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்தவாறு தொடர்வதைப் போலவே, இனிவரும் காலங்களிலும் எனது பயணம் அமையும். கட்சியை விட்டு நான் ஒருபோதும் வெளியேறமாட்டேன். என் மீதான காழ்ப்புணர்ச்சியிலும், தமது தனிப்பட்ட இயலாமைகளின் அடிப்படையிலும் என்னை யாரும் எமது கட்சியிலிருந்து வெளியேற்றவும் முடியாது." - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட

02 ஆம் பக்கத்தில்...



## சிறீதரன் சூளுரை






# தமிழரசுக் கட்சியில் எவரும் பார் லைசன்ஸ் பெறவில்லையா?

## சத்தியக் கடதாசியை உடன் வழங்க வேண்டும்; சுமந்திரனிடம் பொதுஜன பெரமுன கோரிக்கை

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் எவரும் பார் லைசனை பெறவில்லை என்பதை சத்தியக் கடதாசியின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியில் சிலர் பார் லைசனை பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அது கட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு உடனடியாக பதில்கள் அளிக்கப்பட வேண்டும்

02 ஆம் பக்கத்தில்...






# தமிழர்கள் மீது தீராப்பகை கொண்ட ஜே.வி.பி

## ஆதரிப்பது அர மடைமைத்தனம்

ஜே.வி.பியினர் தங்களை மார்க்சியவாதிகளாகக் காட்டிக்கொண்டு பௌத்த சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலையே முன்னெடுத்து வருகின்றனர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் சனநாயகத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.



02 ஆம் பக்கத்தில்...











## தமிழரசுக் கட்சியில் எவரும் பார் லைசன்ஸ் பெறவில்லையா?

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பில் மாம்பழம் சின்னத்தில் போட்டியிடும் பொ. ஐங்கரநேசன் ஞாயிற்றுக்கிழமை கோண்டாவிலில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இனங்களுக்கிடையே கலைஞர்களின் ஊடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் 2003ஆம் ஆண்டு கொழும்பு நகர மண்டபத்தில் தமிழ், சிங்கள கலை இலக்கியவாதிகள் இணைந்து கலைக்கூடல் நிகழ்ச்சியை நடாத்தியிருந்தனர்.

இதனை ஏற்பாடு செய்தவர்களில் நானும் ஒருவன். ஆனால் இன நல்லிணக்கத்தைச் சகிக்கமுடியாத ஜே.வி.பியினர் புத்தபிக்குகள் சகிதம் ஊர்வலமாக வந்து தாக்குதல்களை மேற்கொண்டனர். தமிழர்கள்மீது தீராப்பகை கொண்ட ஜே.வி.பியை தமிழ் மக்களே ஆதரிப்பது அரசியல் மடைமைத்தனமாகும்

மார்க்சியம் இன மத மொழி பேதங்களைக் கடந்து மனிதர்களை நேசிக்கக் கற்றுக் கொடுக்கும் ஒரு தத்துவம் ஆகும். ஆனால் ரோகண விஜயவீராவின் மறைவுக்குப் பின்னர் ஜே.வி.பி ஏனைய சிங்களக் கட்சிகளைப் போன்றே முற்றுமுழுதாக பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்சியாக மாறிவிட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்த காலப் பகுதியில் அதனை ஆதரித்தமைக்காக சந்திரிகா அம்மையாரின் கணவர் விஜய குமாரதுங்காவின் ஆதரவாளர்கள் பலரையும் விக்கிரமபாகு கருணரட்னவின் ஆதரவாளர்கள் பலரையும் தம் இனம் என்றும் பாராமல் சுட்டுக் கொன்றவர்கள் இவர்கள் தான். தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் துண்டாடியவர்கள் இவர்கள்தான். விடுதலைப் புலிகளை அழித்ததில் அமெரிக்காவின் பங்களிப்புக்காக அமெரிக்கத் தூதரகம் சென்று கைகுலுக்கியவர்களும் இவர்கள்தான்.

ஜே.வி.பி இப்போது தேசிய மக்கள் சக்தி என்ற புதிய முகமூடியுடன் தேர்தல் அரசியலில் ஈடுபட்டுவருகிறது. ஜனாதிபதித் தேர்தலின்போது ராஜபக்சாக்களின் மீதும் ரணில் தரப்பின் மீதும் சிங்கள மக்கள் கொண்டிருக்கும் வெறுப்பு தென்னிலங்கையில் அரசியல் தலைமையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அந்த மாற்றம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரப்போவதில்லை. படித்தவர்கள் சிலர்கூட இதனைப் புரிந்து கொள்ளாமல் தமிழ்க் கட்சிகளின் மீது கொண்டிருக்கும் வெறுப்புக் காரணமாக ஜே.வி.பியை ஆதரிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

அமைச்சர் பதவிக்காகத் தமிழ் மக்களை ஜே.வி.பியிடம் அடகு வைப்பதற்கும் சிலர் தயாராக இருக்கிறார்கள். தமிழ் மக்கள் இதனைப் புரிந்துகொண்டு ஜே.வி.பியை வடக்கு கிழக்கில் முற்றாக நிராகரிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## தமிழரசுக் கட்சியில் எவரும் பார் லைசன்ஸ் பெறவில்லையா?

**என்றும் பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.**

**யாழ். ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

“பார் லைசன்ஸ்சோ - சாராயக் கடைகளோ யாருக்கும் இதுவரையில் பெற்றுக் கொடுக்கவில்லை எனச் சத்தியக் கடதாசி ஒன்றை அண்மையில் கொடுத்திருந்தேன். அதேபோல் என்னுடைய சக வேட்பாளர்கள் முக்கியமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இத்தகைய சத்தியக் கடதாசியைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன்.

ஏனென்றால் தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற பார் லைசன்ஸ் விவகாரத்தில் யார், யார் இந்த பார் லைசன்ஸ்சை பெற்றுள்ளார்கள் என்று மக்களுக்குத் தெரிய வேண்டும்.

மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இவர்களை நாடாளுமன்றம் அனுப்பியது சாராயக் கடைகளை வாங்குவதற்காக அல்ல.

ஆகவே, யார் யார் வாங்கினார்கள் என்பது வாக்களித்த மக்களுக்குக் கட்டாயம் தெரிய வேண்டும். ஆனால், இந்த உண்மையை வெளிப்படுத்த வேண்டிய புதிய ஆட்சியாளர்கள் கூட அதனை வெளிப்படுத்தத் தயங்குகின்ற நிலைமைதான் உள்ளது.

இவர்கள் ஏன் தயங்குகின்றார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் முக்கியமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து வேட்பாளர்களும் பார் லைசன்ஸ் வாங்கவில்லை எனச் சத்தியக் கடதாசியைக் கொடுக்க வேண்டும். ஆனால், இதுவரைக்கும் எவரும் அப்படியான சத்தியக் கடதாசியை கொடுக்கவில்லை. ஒவ்வொரு நாளும் சாரயக் கடை தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகங்களில் கதைத்துக் கொண்டிருக்கின்றார்.

எங்களுக்கு அவர் ஒரு முன்மாதிரியான அரசியல்வாதி. அவரைப் பார்த்துத்தான் நாங்களும் சில விடயங்களை அதிலும் அவருடைய உரைகளில்தான் படித்துக் கொள்கின்றோம்.

எனவே, நாம் கேட்டது போல அவர் முன்மாதிரியாக ஒரு சத்தியக் கடதாசியைக் கொடுக்க வேண்டும். சாராயக் கடை சம்பந்தமாக உண்மை தெரிய வேண்டும் என்று ஜனாதிபதியிடமும் சென்று கதைத்திருந்தவர் அவர்.

அவ்வாறு முதலில் அவரே ஒரு சத்தியக் கடதாசியைக் கொடுத்து அவரது கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் சத்தியக் கடதாசியைக் கொடுக்க அழுத்தம் கொடுக்க வேண்டும். இதனை முன்மாதிரியாகச் செய்யுங்கள் என சுமந்திரனை மரியாதையுடன் கேட்கின்றோம்.

வாக்களித்த மக்களுக்கு உண்மை தெரிய வேண்டும். பார் லைசன்ஸ் வாங்கினார்களா? இல்லையா? என்பது தெரிய வேண்டும். அதை விடுத்து யாரையும் சேறு பூசுவது எங்களது நோக்கமும் அல்ல. என்றார்.

## தமிழரசில் இருந்து என்னை யாரும்

**முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் சிவஞானம் சிறீதரனுக்கு ஆதரவளிக்கும் வகையில் யாழ். வட்டுக்கோட்டைத் தொகுதியில் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சிறீதரன் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, கட்சி ரீதியாகவும், தனிநபராகவும் என்னை ஆத்மார்த்தமாக நேசிக்கும் மக்களின் நியாயபூர்வமான கேள்விகள், உட்கட்சி முரண்நிலைகள் குறித்தே அமைந்திருக்கின்றன.

கட்சிக்கு எதிராகவும் தெரிவு செய்யப்பட்ட தலைவராக நான் செயற்பட முடியாதவாறும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டும் பலர், கட்சியைவிட்டு நான் வெளியேறியிருக்கலாம் என்ற கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். அதேவேளை, என்னைக் கட்சியைவிட்டு வெளியேற்றும் கைங்கரியங்கள் முன்னெடுக்கப்படலாம் என்றும் எதிர்வுகூறுகின்றார்கள்.

என்னையும், எனது தலைமைத்துவத்தையும் நேசிக்கின்ற - விசுவாசிக்கின்ற எனது மக்களுக்கு நான் சொல்ல விரும்புவது ஒன்றுதான். எந்தச் சூழ்நிலையிலும் நான் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறப்போவதில்லை. என் மீதான காழ்ப்புணர்ச்சியிலும், தமது தனிப்பட்ட இயலாமைகளின் அடிப்படையிலும் என்னை யாரும் எமது கட்சியிலிருந்து வெளியேற்றவும் முடியாது.

தடைகள் அனைத்தையும் தாண்டி, எமது மக்கள் விரும்புகின்ற, அவர்களது மனதறிந்த மக்கள் பிரதிநிதியாக எனது அரசியல் பயணம் தமிழரசுக் கட்சியிலேயே தொடரும் என்பதை, தமிழீழப் பிரகடனம் நிறைவேற்றப்பட்ட வரலாற்று மண்ணான வட்டுக்கோட்டையில் வைத்து உறுதியோடு உரைக்கின்றேன்.” - என்றார்.




# பழுகாமத்தில் சாணக்கியனுக்கு அமோக வரவேற்பு...!






மட்டக்களப்பு பட்டிருப்பு தொகுதிக்குட்பட்ட பழுகாமத்தில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் இரா. சாணக்கியன் அவர்களின் தேர்தல் பிரச்சார கூட்டத்துக்கு அமோக வரவேற்புடன் பாரிய ஆதரவு அவ் ஊர் மக்களால் வழங்கப்பட்டது. நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான தமிழரசு கட்சியின் விசேட பரப்புரை கூட்டங்களுக்கு இவ்வாறாக மக்கள் அணி திரண்டு வந்து தங்களது பேராதரவுகளை தெரிவித்து வருகின்றார்கள்.

## ரோட்டரி கிளப்பின் ஆதரவில் உலக போலியோ தினம் 2024




**(ஹஸ்பர் ஏ.எச்)**

உலகபோலியோஒழிப்புதினம்திருகோணமலை பரி ஜோசப் கல்லூரியில் நடைபெற்றது

'உலக போலியோ ஒழிப்பு தினம்' (24-10-2017) மேலும் 'இலங்கையில் இருந்து போலியோ முற்றிலுமாய் இல்லா தொழிக்கப்பட்டது' நினைவுகூறும் வகையில், ஒரு விழிப்புணர்வு செயலமர்வு, திருகோணமலை ரோட்டரி கழக சார்பில் 28 - 10 - 2024 அன்று திருகோணமலை பரி ஜோசப் கல்லூரியில் நடைபெற்றது.

இவ் நிகழ்வில் உலகளவில் ரோட்டரி கழகத் தின்செயல்பாடுகளை விபரித்து பெரிய சாதனையான போலியோ இல்லாத உலகம் திட்டத்தை விபரித்ததுடன் வரவேட்ப்புரையையும் திரு ஜெயசங்கர் மற்றும் திரு தவசிலிங்கம் நிகழ்த்தினார்கள்.

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் முன்னாள் பொதுசன தொடர்பாளர் டாக்டர். ஈ. ஜீ. ஞானகுணாளன்,, ''இலங்கையில் இருந்து போலியோ முற்றிலுமாய் இல்லா தொழிக்கப்பட்டது'' சம்பந்தமான விபரங்களை எடுத்து கூறி, உலகத்திலே போலியோ இல்லா தொழிப்பதட்கு சர்வதேச ரோட்டரி கழகம் 550 மில்லியன் டாலர் நிதி சேகரித்து வழங்கிய விபரங்களையும் எடுத்து கூறினார். இந்த வருடம் இன்றுவரை உலகில் 54 போலியோ நோயாளியாளிகள் மட்டுமே, பாக்கிஸ்தான்(32) மற்றும் ஆப்கானிஸ்தான்(22) ஆகிய நாடுகளி லிருந்து இனம் காணப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் இலங்கையில் இருந்து மலேரியா நோய் இல்லாதொழிக்கப்பட்டதையும். ஞாபகப்படுத்தி அவ்வாறு டெங்கு நோயையையும் ஒழிப்பதட்கு மாணவ சமுதாயமும் முன் வர வேண்டுமென்று கேட்டு கொண்டார்.

இறுதியில் திருகோணமலை பரி ஜோசப் கல்லூரி இன்டெரெக்ட் கழக சார்பில் நன்றி உரை தெரிவிக்கப்பட்டது.

## சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு!!




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

பாராளுமன்றம் தேர்தலில் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திரு மதி.ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் இடம் பெற்ற சிரேஸ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வானது மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் (28) திகதி இடம் பெற்றது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடையங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் இதன் போது விரிவாக தெளிவூட்டப்பட்டது.

## இடிமின்னல் தாக்குதலில் குடும்பஸ்தர் பலி

**(ஏறாவூர் எம்ஜிஏ நாஸர்)**



மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காயான்குடா வயற்பிரதேசத்தில் (28) மாலை ஏற்பட்ட இடிமின்னல் தாக்குதலில் குடும்பஸ்தர் கூலித் தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் என்பவரே பலியானவரென கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர் .

காயன்குடா வயலில் வரம்பு கட்டிக் கொண்டிருந்த வேளை மழை பெய்யாத சமயம் திடீரென ஏற்பட்ட இடிமின்னலில் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நசீர் கரடியனாறு பொலிஸாருடன் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தை பார்வையிட்டு முதற்கட்ட விசாரணையில் விசாரணைகளை முன்னெடுத்தார்.

கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் , சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உடல் கூறு பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது .

## மறைந்த சண்முகரத்தின குருக்கள் விஸ்வநாத குருக்களின் நினைவு மலர் வெளியீடு




செட்டியார் தெரு மற்றும் பம்பலபிட்டி பழைய கதிரேசன் ஆலயத்தில் 50 வருட காலமாக ஆன்மீக குருவாக இருந்து மறைந்த சண்முகரத்தின குருக்கள் விஸ்வநாத குருக்கள் அவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை வஜ்ரா பிள்ளையார் ஆலய வளாக மண்டபத்தில் இடம்பெற்ற போது அவர் ஞாபகார்த்தமாக நினைவு மலர் வெளியீடு செய்து அதனை நாகராஜ குருக்கள் மற்றும் ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் சச்சிதானந்த குருக்கள், கனடா கமலநாதன் குருக்களிடமிருந்து பெறுவதை காணலாம் .

# அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி பயிற்சி நெறியின் இறுதி நாள் கலை நிகழ்வு!!






**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்ற பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான 200 மணித்தியால சிங்கள பயிற்சி வகுப்பின் இறுதி நாள் கலை விழாவானது மண்முனை வடக்கு பிரதேச செயலகடேபா மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

தேசிய கீதம் இசைக்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய நிகழ்வில் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் கண்கவர் கலை கலாசார நிகழ்வுகள் சிங்கள மொழியில் நிகழ்த்தப்பட்டன.

இப் பயிற்சி வகுப்பின் மூலம் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழி ஆற்றலை விருத்தி செய்து கொள்வதுடன் தங்களது வேலைகளையும் இலகுபடுத்திக் கொள்ள வழிவகுக்கின்றது.

தேசிய இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துடன் சிங்கள மொழி மூலம் வேலைகளை திறம்பட மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே இப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பயிற்சி நெறியின் வளவாளர்களான செல்வி.எம்.கே.திலினி மதுசிகா மற்றும் திருமதி ஜெனிடா போல் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

# ஊடகவியலாளர் கௌரவிப்பு நிகழ்வ




**(ஆலையடிவேம்பு நிருபர்)**

திருக்கோவில் சமூக தரிசன ஒன்றியம் மற்றும் சக்தி சனசமூக நிலையம் ஆகிய அமைப்புக்களின் 10 வருட நிறைவை முன்னிட்டதான வாசிப்பு வார நிகழ்வும் ஊடகவியலாளர் உள்ளிட்டவர்களின் கௌரவிப்பு நிகழ்வும் திருக்கோவில் காயத்திரி கிராமத்தில் (27) இடம்பெற்றது.

உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே எனும் தொனிப்பொருளுக்கமைய சக்தி சனசமூக நிலைய தலைவர் பி.நந்தபாலு தலைமையில் அன்னை சிறுவர் நூலக மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஆன்மீக அதிதியாக சிவஸ்ரீ ஆறுமுக கிருபாகர குருக்கள் கலந்து கொண்டதுடன் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச சபை செயலாளர் வீ.ஜெயந்தி சிறப்பு அதிதிகளாக திருநாவுகரசர் நாயனார் குருகுலத்தின் பணிப்பாளர் இராசரெட்ணம் தம்பிலுவில் தேசிய பாடசாலையின் ஓய்வு நிலை அதிபரும் திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வண்ணகருமான திரு.வ.ஜயந்தன் ஊடகவியலாளர்களான எஸ்.கார்த்திகேசு மற்றும் வி.சுகிர்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது ஊடகத்துறை மூலம் வாசிப்பினை ஊக்கப்படுத்தும் வகையில் ஊடகவியலாளர்களான எஸ்.கார்த்திகேசு மற்றும் வி.சுகிர்தகுமார் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள 8 நூலகங்களின் நூலக உதவியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் வாசிப்பின் முக்கியத்துவம் தொடர்பான உரைகளும் இடம்பெற்றது.



நாள் தோறும்
சுபீட்சம் மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com

# இவ் வருட தீபாவளி பண்டிகை சிறப்பானது: அது ஏன்?



'தீபம்' என்றால் ஒளி, விளக்கு. 'ஆவளி' என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி, இருள் நீக்கி, ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும். தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம்.

தீபாவளி பண்டிகை இந்த ஆண்டு அக்டோபர் 31ம் தேதி வியாழக்கிழமை கொண்டாடப்பட உள்ளது. வியாழக்கிழமை என்பது மங்கல காரகனான குரு பகவானுக்குரிய நாள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அது தவிர இந்த ஆண்டு தீபாவளிக்கு வேறு சில சிறப்புக்களும் உள்ளன. வழக்கமாக பெரும்பாலான ஆண்டுகள் தீபாவளி திருநாள், அமாவாசையுடன் தான் இணைந்து வரும். ஆனால் இந்த ஆண்டு அக்டோபர் 31ம் தேதி மாலை 04.29 மணிக்கு தான் அமாவாசை திதி துவங்குகிறது.

மிக அரிதாக இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை, சுபநிகழ்ச்சிகள் நடத்துவதற்கான சுபமுகூர்த்த நாளில் அமைந்துள்ளது. அதிலும் அன்று நாள் முழுவதும் சித்திரை நட்சத்திரம் உள்ளது மற்றொரு தனிச்சிறப்பு.

சித்திரை நட்சத்திரம் என்பது சக்கரத்தாழ்வார், சித்ரகுப்தர், விஸ்வகர்மா ஆகியோர் அவதரித்த நட்சத்திரமாக சொல்லப்படுகிறது. இவர்கள் மூவருமே வாழ்க்கையில் வளர்ச்சி, கலைகளில் தேர்ச்சி, பலவிதமான செல்வ நலன்களையும் வழங்கக் கூடியவர்கள். ஞானத்தை அருளும் குரு பகவானுக்குரிய வியாழக்கிழமையில், சித்திரை நட்சத்திரமும் இணைந்த நாளில் இந்த ஆண்டு தீபாவளி வருகிறது. அதிலும் நல்ல விஷயங்களை துவங்குவதற்கு ஏற்ற மங்கலகரமான சுபமுகூர்த்த நாளுடன் வருகிறது.

அதனால் தீபாவளி அன்று மங்கல பொருட்கள் வாங்கலாமா? எப்போது இருந்து அமாவாசை விரதம் கடைபிடிக்க வேண்டும் என்ற குழப்பம் இந்த ஆண்டு கிடையாது. இந்த ஆண்டு தீபாவளி திருநாளான அக்டோபர் 31ம் தேதியன்று நாள் முழுவதும் சித்தயோகம் உள்ளதால் தாராளமாக புதிய விஷயங்களை துவங்கலாம். அறியாமை என்னும் இருள் நீக்கி வெற்றியையும் ஒளிமயமான சிந்தனையையும் இந்த தீபத் திருநாள் பெற்றுத் தர வேண்டும்.

நரகாசுரனை வதைத்த தினத்தை வீடுகளில் தீபஒளி ஏற்றி மனஇருள் நீக்கி தீபாவளி பண்டிகையாக கொண்டாடும் இத்தருணத்தில் தமிழர்களது பாரம்பரியமான பண்பாடுகளால் நம் திறமைகளை வளர்த்து நாட்டை ஒளி நிறைந்ததாக மாற்ற வேண்டும் என்றும் நல்ல மழை பொழிந்து வேளாண்மை செழிப்பாக வேண்டும். தீபாவளி அனைவர் வாழ்விலும் ஒளி ஏற்றட்டும்.



**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி. சகாதேவராஜா , காரைதீவு**

# தும்புத்தடியை நிறுத்தினாலும் வெல்வோம் என்ற மடத்தனமான சிந்தனை மலையேறிவிட்டது!

## ஊடகச் சந்திப்பில் வேட்பாளர் பிரகாஷ் காட்டம் !

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சியில் தும்பு தடியை நிறுத்தினாலும் மக்கள் வாக்களிப் பார்கள் என்ற மடத்தனமான சிந்தனை இன்று மலையேறிவிட்டது. இம்முறை தேர்தல் அதற்கு சாட்சி பகரும் .

இவ்வாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்ட மைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் இராஜகுமார் பிரகாஷ் தெரிவித்தார்.

காரைதீவில் அமைந்துள்ள அம்பாரை ஊடக மையத்தில் அவரது ஊடகச் சந்திப்பு (28) திங்கட்கிழமை இடம்பெற்றது.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

தந்தை செல்வநாயகம் விதைத்த தமிழ் தமிழ் தேசியம் இன்னும் எங்களது உள்ளத்தில் ஏக்கத்துடன் காணப்படுகின்றது .

நாங்கள் அக்கட்சியை விமர்சிக்கவில்லை. ஆனால் அதில் உள்ள ஓரிரு தலைவர்களின் செயற்பாடு தான் இன்று அது இந்த அளவு மோசமாக நிலைமைக்கு போனதுக்கு காரணம். ஒரு சிலரது தலைக்கனம் ஆணவம் உடைக்கப்பட வேண்டும் . பழைய தரமான தலைவர்கள் ஒதுங்கி விட்டார்கள். இன்று தகைமையான தரமான தலைவர்கள் இன்றில்லை. நாங்கள் அம்பாரை மாவட்டத்தில் ஒற்றுமையாக நின்றால் தான் ஒரு பிரதிநிதித்துவத்தை பெறலாம் என்று காலில்



விழாக் குறையாக கேட்டோம். எமக்கு சங்கும் தேவை இல்லை வீடு தேவை இல்லை ஒரு பொதுச் சின்னத்தில் வாருங்கள் என்று எல்லாரும் கேட்டோம். ஆனால் அவர்கள் மசியவில்லை. ஒரு சிலரின் சர்வாதிகாரி போக்குதான் இன்று இங்கு இரண்டு அணியாக பிரிந்த காரணம்.

நாங்கள் எட்டு மாவட்டங்களிலும் ஒற்றுமையாக பயணிக்கின்றோம் எங்களுக்குள் ஏழு கட்சிகள் இருக்கின்றன ஆனால் எந்தவித பிளவும் இல்லை பிரிவும் இல்லை.

ஆனால் இன்று தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் தனித்து வெட்டியோடுகிறார்கள். அவர்களுள் போட்டியும் பொறாமையும் தான் கூடுதலாக இருக்கின்றது. மக்கள் தீர்ப்பளிப்பார்கள் . இனத்துக்காக போராடிய மாவீரர்களைக் கூட அலட்சியப்படுத்தினார்கள் .நினைவேந்தலுக்கு ஒரு விளக்கும் கூட கொழுத்தாதவர்கள் இன்று தேர்தலில் நிற்கிறார்கள்.

இதே வேளை எமது சில இளைஞர்கள் அரச பக்கம் கவனத்தை திருப்பி இருக்கிறார்கள். அதற்கு சில தமிழ் கட்சிகள் தான் காரணம் என்பதனை மறந்து விட முடியாது. ஆனால் அம்பாரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த சிந்தனை பிழைக்கும் .எனவே இளைஞர்கள் சிந்தித்து ஒற்றுமைக்காக கடைசி வரை ஏங்கிய சங்குக்கு வாக்களிக்க வேண்டும். எங்களுக்கும் அரசியல் தலைமை வேண்டும் என்ற உயரிய சிந்தனையை மறந்து விட வேண்டாம். என்றார்..

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இலஞ்சம் மற்றும் ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிகள் மாகாண ரீதியில் விஸ்தரிக்கப்படும்

(ஹஸ்பர் ஏ.எச்)

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் ஊடாக ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் போது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிகள் விஸ்தரிக்கப்படும் என திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி தலைமை வேட்பாளர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்

திங்கட்கிழமை கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொழும்பில் அமைந்துள்ள இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு பொதுமக்கள் அதிகளவில் முறைப்பாடுகள் செய்து வருகின்றனர். இந்த வருடம் முதல் 9 மாத காலப்பகுதியில் மட்டும் சுமார் 3 ஆயிரம் முறைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த ஆணைக்குழுவின் தற்போதைய ஆளணி மற்றும் வசதிகள் குறைவு காரணமாக விசாரணைகளைத் துரிதப்படுத்த முடியாதுள்ளது. அதிக தாமதங்கள் ஏற்ப



டுகின்றன. சில விசாரணைகள் இரண்டு, மூன்று வருடங்கள் வரை செல்வதாகத் தெரிய வருகின்றது. இதனால் ஊழலை விரைவாகக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் ஆட்சியமைக்கும் பட்சத்தில் இந்த ஆணைக் குழுவின் பணிகளை விரைவு படுத்தும் பொருட்டு மாகாண மட்ட அலுவலகங்களை தாபிக்க நடவடிக்கை எடுப்போம். இதற்கு தேவையான சட்டத்திருத்தங்களை முன்னெடுப்போம். இதன்படி மேல்மாகாணம் தவிர்ந்த ஏனைய 8 மாகாணங்களிலும் மாகாண அலுவலகங்கள் தாபிக்கப்படும்.

இதன் மூலம் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து துரிதமாக விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்டோருக்கு எதிராக துரிதமாக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். பொதுமக்கள் எதிர்பார்க்கும் ஊழலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் விரைவு படுத்தமுடியும்.

எனவே, நாட்டில் ஊழலைக்கட்டுப் படுத்தும் கொள்கையை முன்னெடுத்து வரும் சஜித் பிரேதமாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்றார்.

# எல்பிட்டிய தேர்தல் பின்னடைவு பாராளுமன்ற தேர்தலிலும் ஏற்படும்

(க.கிஷாந்தன்)

தற்போதைய அரசாங்கத்தின் மீது மக்களிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதை எல்பிட்டிய தேர்தல் முடிவுகள் வெளிகாட்டுகின்றன. இதே நிலை பாராளுமன்ற தேர்தலிலும் ஏற்படும் என மலையக மக்கள் முன்னணி தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் இணைத்தலைவரும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பொதுவாக இலங்கை அரசியலில் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து அதில் வெற்றிப்பெறும் ஜனாதிபதி மற்றும் அவருடைய கட்சி அடுத்து வருகின்ற அனைத்து தேர்தல்களிலும் பாரியளவில் வெற்றிப்பெறுவதை நாம் கடந்த காலங்களில் பார்த்திருக்கின்றோம்.

ஆனால் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்து ஒரு மாதத்தின் பின்பு நடைபெற்ற உள்ளுராட்சி மன்ற தேர்தலில் 50 வீதத்திற்கு அதிகமான வாக்குகளை பெற முடியாமல் இருக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதற்கு காரணம் இந்த ஜனாதிபதியின்



மீதும், அரசாங்கத்தின் மீதும் அதிருப்தி ஏற்பட்டிருப்பது காட்டுகின்றது. ஜனாதிபதி எதிர்கட்சியில் இருந்த போது தான் பதவிக்கு வந்தால் 48 மணித்தியாலயத்தில் பல மாற்றங்கள் செய்வதாக கூறினார். பல அதிசயங்கள் செய்யக்கூடிய திறமை என்னிடமும் தனது குழுவினரிடமும் இருப்பதாக கூறினார். ஆனால் இப்பொழுது நான் மந்திரவாதியோ, தந்திரவாதியோ இல்லை என கூறுகினார். இது தான் உண்மையான நிலைமை பதவிக்கு வருவதற்கு முன்பும் எதிர்கட்சியில் இருந்துக் கொண்டும் எதை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் நாட்காலியில் அமர்ந்தவுடன் தான் கூறியதை நடைமுறைப்படுத்துவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றது என்பதை அப்பொழுது தான் புரிந்துக் கொள்ள முடியும். எனவே, நிதானமாக சிந்தித்து செய்யக்கூடிய விடயங்களை மாத்திரம் மக்களிடம் கூற வேண்டும். அதனையே ஐக்கிய மக்கள் சக்தி தலைவரும், ஏனைய அங்கத்தவர்களும் செய்கின்றார்கள்.

இதனடிப்படையில் நாங்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் வெற்றிகளை கொண்டு புதிய அரசாங்கத்தை அமைக்க கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பில் இடம் பெற்ற தலைமைத்துவ பயிற்சி கருத்தரங்கும் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும்!!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மகளிர், சிறுவர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரனையுடன் மட்டக்களப்பு இளைஞர் சேவை மன்றத்தினால் சர்வ தேச இளைஞர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட தலைமைத்துவ பயிற்சி கருத்தரங்கும் சாதனையாளர் கௌரவிப்பும் (26) திகதி மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் நிசாந்தி அருண்மொழி அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய மாவட்ட இளைஞர் கழக சம்மேளன தலைவர் ஜீ.சஜீவ் தலைமையில் மட்டக்களப்பு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட நிகழ்விற்கு விசேட அதிதிகளாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் மாகாணப் பணிப்பாளர் எச்.யூ.சுசந்த,

மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளான எம்.சசிகுமார், திருமதி.கே.சதீஸ்வரி, அக்ஃச்ணடுச் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஞானப்பிரகாசம் சுரேஸ், அக்ஃச்ணடுச் நிறுவனத்தின் உத்தியோகத்தர் அனுலா அன்டன், பிரதேச இளைஞர் சேவை அதிகாரிகள், மாவட்ட இளைஞர் சேவை பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது தலைமைத்துவ பயிற்சியினை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளும், தேசிய மட்டத்தில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கும் அதிதிகளினால் சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுவிஸ்லாந்தில் வெகுவிமர்சையாக இடம்பெற்ற
# பரதநாட்டிய அரங்கேற்றம்















பரதம் தமிழரின் பழம்பெரும் தெய்வீகக்கலை. தமிழரின் நாகரீகம் பல்லாயிரம் ஆண்டு பழமையானது என்பதை பறைசாற்றி நிற்கும் ஒரு ஆதாரக்கலை. இக்கலை பாமரமக்களையும் ஈர்த்து உணர்ச்சியடையச் செய்யவல்லது. இதன் காரணமாக உலகில் புலம்பெயர்ந்து பரந்து வாழும் தமிழ் மக்களால் வளர்க்கப்படவேண்டிய கலைகளுள் பரதக்கலை முக்கியத்துவம் வாய்ந்த கலையாக கருதப்படுகின்றது.

அத்தகைய கலையின் மகிமையினை உணர்ந்தவர்களுள் திருக்கோணேஸ்வர நடனாலய ஸ்தாபகர் கலாநிதி திருமதி.மதிவதனி சுதாகரன் அவர்களுடைய மாணவி செல்வி.ஜீவிதா ஜீவாதாசனும் ஒருவர் என்றால் மிகையாகாது. செல்வி. ஜீவிதா குரும்பசிட்டி செல்லத்துரையின் புதல்வன் திரு.ஜீவதாசன் அவர்கள் மற்றும் மட்டக்களப்பின் பிரபல வர்த்தகர் புங்குடுதீவு கார்த்திகேசு அன் சன்ஸ் உரிமையாளர் திரு.கார்த்திகேசு அவர்களின் கொள்ளுப் பேத்தியும் திரு சண்முகராசா அவர்களின் பேத்தியுமான யசோதா அவர்களதும் ஏக புத்திரியாவார்.

செல்வி. ஜீவிதா ஜீவதாசனை பொருத்தவரை அவர் தனது மூன்றரை வயதிலிருந்து நடனக்கலையை முறையாகக் கற்றுத் தேறியதோடு நடனத்துறையில் தரம் ஒன்றிலிருந்து ஆசிரியர் தரம் வரை கற்று பரதகலா வித்தகர் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

புலம்பெயர்தேசத்தில் மருத்துவ பீடத்தில் இறுதியாண்டில் கல்விகற்கும் இவர் தன்னுடைய இடையறாத கல்விச்சுமைக்கு மத்தியில் தான் கற்ற பாரம்பரிய கலையையும் விட்டுக்கொடுக்காமல் தன்னை ஒரு சிறந்த நர்த்தகியாக முத்திரை பதிக்கும் நோக்குடன் நடனக்கலையில் சிறந்து விளங்கியதற்கு சான்றுதான் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி சுவிஸ்சர்லாந்தில் துர்க்கா மாநிலத்தில் Pfyn எனும் இடத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்ற அவருடைய பரதநாட்டிய அரங்கேற்றம்.

பரத நாட்டியத்திற்கு பாடல், நட்டுவாங்கம், மற்றும் இசைக்கருவிகளின் துணை தேவை. வீணை, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் என்பன அவற்றில் சில இசைக் கருவிகளாகும். அந்தவகையில் இவ் அரங்கேற்ற நிகழ்வினை நேர்த்தியாக நிகழ்த்தி முடிப்பதற்கு பின்புலமாக இருந்து செயற்பட்ட இசைக்கலைஞர்களில்; நட்டுவாங்கம் திருமதி. மதிவதனி சுதாகரன் உட்பட இந்தியாவில் இருந்து வருகை தந்த அணிசேர் கலைஞர்களும் முக்கிய இடத்தைப்பிடித்துள்ளனர். வாய்ப்பாட்டு திரு. நந்தகுமார் உன்னிக்கிருஷ்ண், மிருதங்கம் திரு. பு.சு. செந்தில்குமார் B High Grade Artist of the All India Radio, வயலின் திரு. நெய்வேலி குராதாகிருஷ்ணா (B.com, MA Music, Ph.D), புல்லாங்குழல் Dr. சௌந்தர்ராஜன் வினோத்குமார் ஆகியோரும் இளைய கலைஞர்களாக வாய்ப்பாட்டு திருமதி. அக்ஷரா விஜயக்குமார் சுதாகரன், நட்டுவாங்கம் செல்வி. அபிநயா சுதாகரன் போன்ற கலைஞர்களின் பங்கினையும் இங்கு பதிவு செய்ய வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

இந்நிகழ்வினை சிறப்பாக தொகுத்து வழங்கியவர் பிரான்ஸ் கூகீகூ தமிழ் வானொலியின் நிகழ்ச்சித் தொகுப்பாளரான திரு. கஜேந்திரன் இராஜேந்திரம் அவர்கள்;. இவர் நிகழ்வினை தொய்வில்லாமல் பார்வையாளர்களிடம் கொண்டுசேர்த்து கவனத்தை தன்பால் ஈர்த்து வைக்கின்ற காந்தத்தன்மையை உடையவராக களத்தில் செயற்பட்டார் என்றே கூறவேண்டும். இவர்கள் அனைவரினதும்; கூட்டுமுயற்சிக்குக் கிடைத்த பரிசே இவ் அரங்கேற்றத்தின் நேர்த்தியான வெளிப்பாடு என்பதை இங்கு கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாணவி ஜீவிதா ஜீவதாசனின் நடனக் கலை குருவான திருமதி. மதிவதனி சுதாகரன் மற்றும் பிரதம விருந்தினர் கனடாவின் அருணோதயா நடனக்கலையகத்தின் நிறுவுனர் மற்றும் கலை இயக்குனராக திகழும் திருமதி கீதா சிவமோகன்(அமெரிக்கா), சிறப்பு விருந்தினர் யாழ் பல்கலைக்கழகத்தில் கலைமாணி மற்றும் நாட்டியக்கலைமணி பட்டங்களை பெற்ற திருமதி சிவதர்சனி திருமாமணி ஆகியோர் தத்தமது ஆசியுரையில் மாணவியின் பரதநாட்டிய பயணத்தில் முக்கியமான கட்டத்தை அடைந்ததற்கு மனமார்ந்த பராட்டுக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளதோடு நன்றியையும் நல்லாசிகளையும் தெரிவித்துள்ளனர்.

புலம்பெயர் தேசத்திலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் நிகழ்விற்கு சமூகமளித்திருப்பினும் அதிலே பிரதானமானவர்களாக கலைக்கோவில் ஆடல் கலையக நிர்வாகியும் ஆசிரியையுமான நிமலினி ஜெயக்குமார், கனடாவிலிருந்து வருகை தந்த அருணோதயா நடனக்கலையக ஆசிரியை திருமதி. சசி அரவிந்த், திருமதி அவதாரம் நடனாலயத்தின் ஆசிரியை டயானி நாகேந்திரம் மற்றும் சர்வாயுதர் நடனாலயத்தின் ஆசிரியை செல்வி சர்வகாந்தசேனை யோகசேனன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

ஜீவிதாவின் கலை மற்றும் கலாச்சாரத்தின் மீதுள்ள அர்ப்பணிப்பை நினைவுகூறும் எவரும் அவருக்கு பின்புலமாகவும் வழிகாட்டியாகவும் இருந்து செயற்பட்ட அவரது குரு திருமதி. மதிவதனி சுதாகரன் அவர்களை மறக்க முடியாது. பெற்றோருக்கு அடுத்தபடியாக அவரது கலைப்பயணத்தின் திறவுகோல் என்றால் அது இவர்தான்.

நாட்டியத்துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ள நடனக்கலைச்செம்மல் ஆடல் அரசி திருமதி. மதிவதனி சுதாகரன் அவர்களது நெறிப்படுத்தலில் சுவிஸ்லாந்தில் இதுவரையில் 44 மாணவிகள் அரங்கேற்றம் செய்துள்ளனர். 36வது அரங்கேற்ற மேடையாக செல்வி ஜீவிதா ஜீவாதாசனின் அரங்கேற்றம் அமைந்திருந்தது. 1986இல் இலங்கையில் புனித மரியாள் கல்லூரியில் நடன ஆசிரியராக ஆரம்பமானது அவரது கலைப் பயணம். சுவிஸ் நாட்டில் முதன்முதலில் ஐரோப்பிய மட்டத்தில் பரத நாடட்டிய போட்டியை ஆரம்பித்து வைத்தவரும் நுண்கலை பரீட்சையை ஆரம்பித்தவரும் அதற்கான பாடத்திட்டத்தை வகுத்தவரும் இவரே. அனைத்துலக தமிழ் கலை நிறுவகத்தூடாக 11 மாணவர்கள் ஆற்றுகைத்தரம் சித்தியடைந்து வெளியேறியுள்ளார்கள். இதில் 10 மாணவிகள் நடனக்கலை வித்தகர் பட்டம் பெற்றுள்ளார்கள்.

2016 இல் நடைபெற்ற கலாவித்தகர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் 40 மாணவர்கள் கலாவித்தகர் பட்டம் பெற்றுள்ளனர். இது வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்வாகக் கருதப்படுகிறது.

2011-2014 ஆகிய ஆண்டுகளில் தோற்றிய மாணவர்களில் 23 மாணவர்கள் திருமதி. மதிவதனி சுதாகரன் அவர்களின் மாணவிகளாவார். இவர்கள் பரதகலாவித்தகர்களாக வெளியேறியுள்ளார்கள். சுவிஸ் நாட்டில் அதிகூடிய நாட்டிய மயில்களை உருவாக்கி நாட்டிய மயில் சிறப்பு விருதை தனதாக்கிக் கொண்ட ஆசிரியையும் இவரே.

இவரது அரங்கேற்றங்கள் சுவிஸ், இலங்கை, இந்தியா, லண்டன் போன்ற நாடுகளில் நிறைவேற்றினாலும் சுவிஸ் நாட்டில் அதிகூடிய மாணவிகளுக்கு அரங்கேற்றத்தை நிறைவு செய்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உண்மையில் ஒரு சிறந்த கலைஞனுக்கு கிடைக்கும் அங்கீகாரம் என்பது அவனை பாராட்டி வழங்கப்படும் விருதுகளே. அவையே அடுத்த கட்டத்திற்கு அவர்களை நகர்த்தும் உந்து சக்திகளாக செயற்படுகின்றன. அந்தவகையில் சிறந்த நடன ஆசிரியைக்கான விருது, நாட்டியகலா வித்தகி, நாட்டிய கலாசூரி, சகலகலா வித்தகி போன்ற பல்வேறுபட்ட விருதுகளை தனதாக்கிக் கொண்டவர் மதிவதனி அவர்கள். இப்படி பல்வேறு நிலைகளிலும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டாலும் இவரது விருதுகளில் சிறப்பாக பார்க்கப்படுவது சரித்திரம் 2013ஆம் ஆண்டு இடம்பெற்ற நிகழ்வில் சுவிஸ் தமிழ் கலை மன்றம் நடாத்திய விருது வழங்கும் விழாவில் அளிக்கப்பட்ட சாதனையாளர் விருது. அவரின் பயணத்தின் மைல் கல்லாகவே இந்த விருது பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் உள்ள கிழக்கு பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் மாணவர்களில் ஒருவர் ஐரோப்பாவில் திருக்கோணேஸ்வரர் நடனாலயத்தையும் அதன் நிறுவுனர் திருமதி மதிவதனி சுதாகரன் அவர்களை பற்றியும் ஆய்வு செய்துள்ளார். இதற்கு முக்கிய காரணம் யாதெனில் அவரது அயராத உழைப்பும் நடனத்துறையின்பால் தன்னை அர்ப்பணித்துள்ள தன்மையினாலும் கலைப்பணியில் நடனத்துறையில் தனக்கென்று தனித்துவமான இடத்தை பிடித்துள்ளார் என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது.

நடனத்துறைக்கு மதிவதனி ஆற்றிய பணி என்பது அளப்பெரியது. தான் கற்றுப்பயனடைந்த ஒரு வாழ்வியல் கலையை குறுகிய வட்டத்திற்குள் மட்டுப்படுத்திக்கொள்ளாமல் அதன் உன்னதத்தினை உலகறிய செய்ய பாடுபட்டு வருகின்றார். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்பவர் செல்வி ஜீவிதா. மேலைத்தேய கலாச்சார மோகத்தில் சிக்குண்டு தமது கலை கலாச்சாரத்தை மறப்பவர் மத்தியில் தான் கற்ற கலையை மறவாமல் தன்னையும் அடையாளப்படுத்தி பெற்றோரையும் ஆசிரியரையும் பெருமைப்படுத்தும் இத்தகைய மாணவர்கள் தான் எதிர்கால இளைஞர்களுக்கு முன்னுதாரணம் என்பது நிதர்சனமான உண்மை.